[7th July 1962

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

*85. கேள்வி.—திரு. வி. ச. சு. மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம், சின்னாளப்பட்டி நகரத்தில் கைத்தறி நெசவாளர் ஆயிரக்கணக்கில் வசிப்பதால் அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No proposal for the construction of houses for weaver members of Weavers' Co-operative Societies in Chinnalapatti has been received. If and when a proposal is received, it will be considered on merits.

SRI V. S. S. MANI : May I know the measures taken for constructing houses to weavers who are outside the Co-operative fold?

THE HON. SRI R. VENKATARAMAN : There is already a scheme for building houses for the weavers in the co-operative sector. Actually we had built over 1,600 houses during the Second Plan period. These houses will belong to the weavers after they have paid monthly instalments for a period of 15 to 20 years. There is also a scheme for implementation during the Third Plan period. I think that that should be adequate.

Atomic Power Plant

*86-A *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI J. MATHA GOWDER : } Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start an Atomic Power Plant in the State during the Third Plan period?

THE HON. SRI R. VENKATARAMAN : A Site Selection Committee constituted by the Government of India has inspected recently sites for the establishment of an Atomic Power Plant in the State. The Committee will report to the Government of India who will take a decision in the matter.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : அந்தக் குழு நம்முடைய ராஜ்யத்தில் எந்த எந்த இடத்தைப் பார்த்திருக்கிறார்கள் ? அணு சக்தி நிலையமொன்றை ஏற்படுத்துவதற்கு நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய இடம் ஏதாவது தகுதியுடையதாக இருக்கிறது என்று அந்தக் குழுவினர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இரண்டு இடங்களை அந்தக் குழுவினர் பார்வையிட்டிருக்கின்றார்கள் ஒன்று—மகாபலிபுரத்திற்கு அருகாமையில் ; மற்றொன்று, ஹோக்கனக்கல் பக்கத்தில். அந்தக் குழுவினுடைய அறிக்கை இன்னும் வரவில்லை.